முருகப்பெருமான் துணை

**மகான் கதம்பமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**28.07.2021**, புதன்கிழமை

1. அருட்குருவே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே வாழ்க
அருட்சுடர் ஏற்றி அருளுகின்ற
ஆறுமுக அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி இனிதே
வழங்குவேன் கதம்பமகரிஷி யானும்
தாழ்விலா பிலவ நள்ளிதிங்கள்
தக்க வியதிகதி கணக்கன் வாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் 12ம் நாள், 28.07.2021 புதன்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசி தனை
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமில்லா மக்களை உருவாக்க
சுத்தநெறி காட்டும் அரங்கஞானி
4. ஞானியரின் திருவடிகளை பற்றிவர
ஞாலமதில் கலியுக மக்களுக்கு
ஞானியரின் அருளாசி பெறுவதோடு
ஞானமார்க்கம் எளிதில் சித்திக்கும்
5. சித்திதரும் நல்ல புத்திதரும்
சிவநெறியாம் சுத்த சைவநெறி
இத்தரையில் உத்தமர்களை படைத்து
இடரின்றி வாழ வழிகாட்டி
6. வழிகாட்டி வழிநடத்தி ஞானிகளாக்கும்
வரலாறு படைக்கும் அரங்கன்
அழியாமை தரும் மார்க்கம் தனை
அனைவரும் ஏற்று வருக
7. வருகவே நிலைமைகள் மாறி
வையகம் வளர்ச்சி காணும்
கருதியே தொடர்ந்து வந்து
கந்தவேலன் வழிபாடு செய்து
8. செய்துமே மக்கள் அனைவரும்
சுப்பிரமணியர் ஞான வழிவர
அய்யம் சலனம் குழப்பங்கள்
அனைத்தும் அகன்று மேவிநன்கு

9. மேவியே மகக்ளிடை தெளிவும்
மேன்மக்களாகும் வாய்ப்புகளும்
அவனியில் உலகோர் கண்டு
ஆற்றலான ஞானயுகம் படைப்பர்

10. யுகமாற்றம் செய்ய வந்தநல்
உயர் ஞானி அரங்கன் வழி
செகத்தை மாற்றும் தேற்றும்
செல்வ வளம் இயற்கை பலம்கூடி

11. கூடியே பேரிடர் பிரளயம் இல்லா
குவலயம் பாதுகாப்பு மிக்க
நாடிடும் ஞான யுகமாற்றம்
ஞானி அரங்கன் தயவின் வழி
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–